[21st March 1959

Hindu Marriage Act

* 935 *Q.*— SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

The Hindu Marriagse Act, 1955-ஐ மீறியதற்காக எத்தனை பேர் 1958-ம் வருஷம் கடைசி வரைக்கும் தண்டிக்கப்பட்டனர் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 125 persons.

SRI P. G. MANICKAM : அவர்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனை யின் விவரங்கள் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தண்டனை என்னென்ன கொடுக்கப்பட்டது என்ற விவரங்கள் என்னிடம் இல்லை.

Salaries of the teachers of the management School at Parayampatti

* 936 *Q.*— SRI K. GOPALA KOUNDER : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) செஞ்சி தாலூகா பரையம்பட்டு கிராமம் மேனேஜ்மெண்ட் பள்ளி ஆசிரியர்களிடமிருந்து சம்பளம் தரப்படவில்லை, என்று புகார்கள் 3—7—58, 17—7—58, 13—8—58, 15—9—58-ல் வந்தனவா ?

(ஆ) அவை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

(இ) இக்காரணத்தினால் பள்ளி மூடப்பட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(ஈ) பள்ளியை திறக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) The matter has been enquired and action is being taken to see that the arrears are paid to the teachers by the Manager.

(*c*) The school has not been closed on this account.

(*d*) Does not arise.

SRI K. GOPALA KOUNDER : அந்த ஸ்கூலில் மூன்று ஆசிரியர்கள் வேலை செய்தார்கள். அவர்களுக்கு நான்கு மாதச் சம்பளம் சேர வேண்டி யிருந்தது. அவர்கள் கல்வி அதிகாரிக்கு ரிப்போர்ட் செய்தார்கள். அதன் பேரில் 2 மாத சம்பளத்தைக் கொடுத்து, இரண்டு மாதச் சம்பளத்தைக் கேட்டதற்குத் தரமாட்டேன் என்று சொல்லி விட்டார்கள். . .

MR. SPEAKER : இதைக் கேள்வியாகக் கேட்பதற்கு பதிலாக மந்திரி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினால் நன்றாக இருக்கும்.

Elementary schools maintained by District Boards and Panchayats

* 936 *Q.*-A— SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாடு ஆசிரியர் பேரவை விழுப்புரத்திலிருந்து, ஜில்லா போர்டு, பஞ்சாயத்து போர்டு பள்ளிகளை சர்க்கார் எடுத்துக்கொள்வது சம்பந்தமாக வந்துள்ள தீர்மானத்தின் நகல் அரசாங்கத்திற்கு வந்துள்ள ளதா ?

(ஆ) அதன் பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?